# மெட்ரோ ரயில்களில் நிரம்பி வழிந்த மக்கள் கூட்டம்

சென்னை, பிப். 27: போக்குவரத்து தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் காரணமாக, அரசுப் பேருந்துகள் போதுமான அளவு இயங்கவில்லை. இதனால், கடந்த மூன்று நாள்களில் அனைத்து மெட்ரோ ரயில் வழித்தடங்களிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. மெட்ரோ ரயில்களில் பிப்ரவரி 25-ஆம் தேதி முதல் பிப்ரவரி 27-ஆம்தேதி வரை கடந்த மூன்று

நாள்களில் 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணம் செய்ததாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு உரிய நிதி வழங்க வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து தொழிலாளர்கள் சென்னை உள்பட தமிழகம் முழுவதும் கடந்த 25-ஆம் தேதி வேலைநிறுத்தத்தை தொடங்கினர். இந்த வேலைநிறுத்தம்காரணமாக, தமிழகம் முழுவதும் 60 சதவீதம் பேருந்துகள் இயங்கவில்லை.

சென்னையில் 30 சதவீத பேருந்துகள் இயங்கவில்லை.

இதையடுத்து, சென்னையில் மெட்ரோ ரயில்களில் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்தது. கடந்த மூன்று நாள்களில்,

அனைத்து மெட்ரோ ரயில் வழித்தடங்களிலும் மெட்ரோ ரயில்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. நெரிசல் மிகுந்த நேரங்களில் 5 நிமிடம் இடைவெளியில் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. மற்ற நேரங்களில் 7 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில் ஓடுகிறது.

போக்குவரத்து தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் காரணமாக, பேருந்துகள் ஓடுமா? ஓடாதா? என்ற குழப்பத்துக்கு

மத்தியில், மெட்ரோ ரயில் போக்குவரத்தை தேர்வு செய்து, பொதுமக்கள் அதில் பயணம் மேற்கொண்டனர். இதனால், சென்னை மெட்ரோ ரயில்களில் கூட்டம் அலைமோதியது. பிப்ரவரி 25-ஆம்தேதி முதல் பிப்ரவரி 27-ஆம்தேதி வரை கடந்த மூன்று நாள்களில் மட்டும் 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

கடந்த 25-ஆம் தேதி அன்று ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 500 பேரும், கடந்த 26-ஆம் தேதி அன்று ஒரு லட்சத்து 15 ஆயிரம் பேரும், சனிக்கிழமை (பிப்.27) அன்று ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோரும் பயணம் செய்ததாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.